# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.11
# 2025, மார்ச் 20, வியாழக்கிழமை
# பங்குனி 6, திருவள்ளுவர் ஆண்டு – 2056

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

(முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.)

1. <u>வினாக்கள் – விடைகள்</u>

வரிசை எண்கள் 61 முதல் 70 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

<u>2. தகவல் கோரல்</u>

"தமிழ்நாட்டில் நடந்த சில குற்ற நிகழ்வுகள் குறித்து." திரு. எடப்பாடி K. பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

3. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2025–2026–ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை</u>

2025–2026–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2025–2026–ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீது பொது விவாதம். (நான்காம் நாள்).

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்:–

24. திரு. A.P. ஜெயசங்கரன்
25. திரு. S.R. இராஜா
26. திரு. த. வேலு
27. திரு. ஜி.கே. மணி
28. திரு. நிவேதா எம். முருகன்
29. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
30. திரு. கு. செல்வபெருந்தகை
31. திரு. பி. தங்கமணி

பேரவை பிற்பகல் 3.06 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21–ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

முனைவர் கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.